சுருக்கம்

திட்டம் மற்றும் வளர்ச்சி – சென்னை, அரசு மனநல காப்பகத்திற்கு மூன்று சக்கர வாகனம் வாங்கியதற்கு பின்னேற்பு மற்றும் அவ்வாகனம் இயக்கத் தேவையான எரி பொருள் செலவினத்திற்கு நிதி ஒப்பளித்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எடி1) துறை

அரசாணை (ப) எண்: 560

நாள் : 02. 06 .2014.
திருவள்ளுவர் ஆண்டு 2045
ஜய, வைகாசி 19

படிக்கப்பட்டது:

மருத்துவக் கல்வி இயக்குநரின் கடித எண்: 70815/திவ1/2/2013, நாள் 13.8.2013.

-------

ஆணை:

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் சென்னை, அரசு மன நல காப்பகத்தை, தேசிய மனித உரிமைகள் கழகம் ஆய்வு செய்த போது சமைத்த உணவு பொருட்களை கொண்டு வார்டுகளுக்கு எடுத்து செல்லக் கூடாது என்றும் வாகனம் வாயிலாக உணவு பொருட்களை வார்டுகளுக்கு கொண்டு சென்று பரிமாற வேண்டும் என தெரிவித்து உடனடியாக இதை நடைமுறை படுத்த வேண்டும் என தெரிவித்ததால், ஒரு வாகனம் நன்கொடை வாயிலாக 14.12.2009 அன்று வாங்கி அவ்வாகனத்தை கொண்டு சமைத்த உணவினை வார்டுகளுக்கு கொண்டு சென்று விநியோகிக்கப்பட்டு வந்தது என்றும் ஒரு வாகனத்தை கொண்டு குறிப்பிட்ட நேரத்தில் உணவு வழங்குவதில் சிரமம் ஏற்பட்டதுடன் உணவு கிடைக்க கால தாமதம் ஆனதால் இம்மருத்துவமனையில் 28.7.2010 அன்று நடைபெற்ற இயக்குநர் தலைமையிலான கூட்டத்தில் பிணியாளர் நல நிதியில் (PD Account) இருந்து வாகனம் வாங்குவது என முடிவு செய்யப்பட்டு, அந்த முடிவின் அடிப்படையில் விலைப்புள்ளி கோரப்பட்டு அதில் குறைவாக விலைப்புள்ளி வழங்கிய எஸ்.என்.ஆர். என்ற நிறுவனத்திடம் இருந்து TN01 G 5270 APE (PIAGGIO) CARGO D 600 என்ற வாகனம் ரூ. 1,59,000/–க்கு வாங்கப்பட்டுள்ளது என்று மருத்துவக்கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. மேலும், பணியாளர் நலன் கருதி மருத்துவமனை வார்டுகளுக்கு உணவு எடுத்து செல்லும் வாகனம் வாங்கியமைக்கு பின்னேற்பாணை மற்றும் அவ்வாகனம் இயக்க தேவையான எரிபொருள் 20 லிட்டர், டீசல் ஒரு மாதத்திற்கு ரூ 1071/– வீதம் ஓர் ஆண்டிற்கு ரூ 12,852/– செலவாகும் என்றும், இச்செலவினத்தை ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்க மருத்துவக்கல்வி இயக்குநர் அரசைக் கோரியுள்ளார்.

3. மருத்துவக் கல்வி இயக்குநரின் கோரிக்கையை அரசு கவனமுடன் பரிசீலித்து அவற்றை ஏற்கலாம் என்று முடிவு செய்து சென்னை அரசு மன நல காப்பகத்திற்கு மூன்று சக்கர வாகனம் ரூ. 1,59,000/–செலவினத்தில் வாகன எண் TN01 G 5270 APE (PIAGGIO) CARGO D 600 வாங்கியதற்கு பின்னேற்பு வழங்கியும், இவ்வாகனம் இயக்கத் தேவையான எரிபொருள் 20 லிட்டர் டீசல் ஒரு

Datacell

மாதத்திற்கு ரூ 1,071/– வீதம் ஓர் ஆண்டிற்கு ரூ 12,852/– (ரூபாய் பனிரெண்டாயிரத்து எண்ணூற்று ஐம்பத்து இரண்டு மட்டும்) ஆகும் செலவினத்தை ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2210–மருத்துவமும் பொது சுகாதாரமும் – 01 – நகர்ப்பகுதி சுகாதாரப்பணிகள் – ஆங்கிலமுறை மருத்துவம் – 110 மருத்துவமனைகளும் மருந்தகங்களும் – I திட்டத்தில் சேராதது – AY – மனநல மருத்துவமனை 45 – பெட்ரோலியம், எண்ணெய் மற்றும் மசகெண்ணெய்.
( த.தொ.கு.2210–01–110– AY – 4506)

5. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினத்திற்கான கூடுதல் நிதி 2014–2015ம் ஆண்டு திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் வழங்கப்படும் அவ்வாறு வழங்குவதை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள மருத்துவக் கல்வி இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும் 2014–2015ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த மதிப்பீட்டு நிதியொதுக்கத்திற்கான கருத்துருவை நிதித் (சுகாதாரம்–II) துறைக்கு அனுப்பும் பொழுது இத்தொகையும் தவறாமல் சேர்த்து அனுப்புமாறு மருத்துவக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

6. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.25557/சுகாதாரம்–II, 2014, நாள் 28.05.2014 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.396 (முன்னூற்று தொண்ணூற்று ஆறு) பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ. ராதாகிருஷ்ணன்
அரசு செயலாளர்

பெறுநர்
மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை–10.
அரசு மனநல காப்பகம், கீழ்ப்பாக்கம், சென்னை–10.
மாநிலக்கணக்காயர், சென்னை–18/35
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–35.

**நகல் :**
மாண்புமிகு அமைச்சர் (மக்கள் நல்வாழ்வு) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதித்(சுகாதாரம் - II / வ.செ. II) துறை, சென்னை–9.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (டேட்டா செல்) துறை, சென்னை–9.
இருப்புகோப்பு / சுத்த நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.
2/6/14